தரம்

06

பாடசாலை மட்ட மூன்றாந் தவணைப் பரீட்சை - 2023

குடியியற் கல்வி

புள்ளிகள்

சுட்டெண்: ☐☐☐☐☐☐

நேரம் : 01.30 மணித்தியாலம்

பகுதி - I

○ **பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

01) தாய்மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் எனக் கூறியவர்,
1. DS. சேனநாயக்க
2. CWW. கன்னங்கரா
3. சேனக பிபில
4. SWRD. பண்டாரநாயக்க

02) உங்கள் திறமைகளை இனங்கண்டு அவற்றை சமூகத்திற்கு வெளிக்காட்டும் நபர்,
1. அதிபர்
2. பெற்றோர்
3. ஆசிரியர்
4. அயலவர்கள்

03) எமது நாட்டின் நிர்வாகப் பிரிவுகளுள் மிகச் சிறிய நிர்வாக அலகு எது?
1. மாகாணம்
2. பிரதேச செயலாளர் பிரிவு
3. மாவட்டம்
4. கிராம உத்தியோகத்தர் பிரிவு

04)



அருகில் தரப்பட்டுள்ள உருவில் ஒற்றுமை, சகவாழ்வு விரிவடைந்து செல்லும் நிலை காட்டப்பட்டுள்ளது. உரு இலக்கம் 1,6 என்பன குறித்து நிற்பது முறையே.
1. நாடு, உலகம்
2. தனிநபர்,உலகம்
3. குடும்பம், உலகம்
4. உலகம், தனிநபர்

05) தனது தாய்நாட்டில் உற்பத்தி செய்த ஆடைகளை மட்டும் பயன்படுத்தி தேசியத்தை மதிப்பதன் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்,
1. CWW. கன்னங்கரா
2. இந்திராகாந்தி
3. மகாத்மா காந்தி
4. சேனக பிபில

(05x2 = 10 புள்ளிகள்)

○ **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

தண்டனைகள், நகரபிதா, பல்லின, குற்றங்கள், தனித்துவம், தவிசாளர், பயிற்சிகள், கட்டுப்பாடுகள்

06) சீருடை மூலம் பாடசாலையின் .... வெளிப்படுத்தப்படுகின்றது.

07) மாநகர சபையின் பொறுப்பாளர் .... ஆவார்.

08) ஒருவர் சட்டத்தினை மீறும் போது நீதிமன்றத்தால் அவருக்கு எதிராக விதிக்கப்படும் வரையறுக்கப்பட்ட ஆணை .... எனப்படும்.

09) பாடசாலை சமூகம் என்பது .... சமூகமாகும்.

10) மனித வளங்களை மேலும் மேம்படுத்துவதற்கு .... உதவுகின்றன

(5x2 = 10 புள்ளிகள்)

❍ **தொடர்புபடுத்துக**

11) பாடசாலை அபிவிருத்தி	a. தவிசாளர்
12) பலவீனம்	b. அநுராதபுரம்
13) பிரதேச சபை	c. பழைய மாணவர்கள்
14) கலாவாவி	d. வளப்பயன்பாடு
15) மனிதத் தேவைகள்	e. கோபம்

(5x2 = 10 புள்ளிகள்)

❍ **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.**

16) அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைக் கொண்ட செயற்றிறன் மிக்கவர்களை உருவாக்கும் இடம் குடும்பமாகும். ( )

17) நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாப்பது உமது கடமையல்ல. ( )

18) சிறுவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாடசாலை "பிள்ளை நேயப் பாடசாலை" ஆகும். ( )

19) திட்டமிடல் வாழ்க்கைக்கு அவசியமன்று ( )

20) சமூகத்தில் நாம் தனியாக வாழ முடியாது. ( )

(5x2 = 10 புள்ளிகள்)

பகுதி - II

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) i) உம்மிடம் காணப்படும் பலவீனங்கள் மூன்று தருக.

....

....

ii) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம் பெறும் வேறு குழுக்கள் மூன்று தருக.

....

....

iii) திட்டமிடுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

....

....

....

iv) மாணவர்களின் கடமைகள் மூன்று தருக.

(3+3+3+3=12 புள்ளிகள்)

02) i) பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள் மூன்று தருக.

ii) பாடசாலைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகள் மூன்று தருக.

iii) ஒற்றுமையாகச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

iv) பிள்ளை நேயப்பாடசாலைச் சூழலின் பண்புகள் மூன்று தருக.

(3+3+3+3=12 புள்ளிகள்)

03) i) வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் மூன்று தருக.

ii) எமது பிரதேசத்தில் இனங்காணக்கூடிய விசேட மனித வளங்கள் மூன்று தருக.

iii) பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் முறைகள் மூன்று தருக.

iv) எமக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகள் மூன்று தருக.

(3+3+3+3=12 புள்ளிகள்)

04) i) எமக்கு சேவைகளை வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூன்று தருக.

....

....

ii) பிரதேச மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

....

....

iii) மரியாதை மிக்க உரையாடலின் பண்புகள் மூன்று தருக.

....

....

....

iv) நன்னடத்தை, ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றை விருத்தி செய்யத் தேவையான பண்புகள் மூன்று தருக.

....

....

....

(3+3+3+3=12 புள்ளிகள்)

05) i) பின்வரும் உருக்களில் காட்டப்படும் செயற்பாடுகளினால் சூழலின் எப்பகுதிகள் மாசடையும்.

....

ii)

1. உலகில் உள்ள மிகச் சிறந்த கலைப்படைப்பான இச்சிலையினைப் பெயரிடுக.

....

2. இது எங்கு அமைந்துள்ளது.

....

iii) சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத நடவடிக்கைகள் மூன்று தருக.

....

....

....

iv) ஒரு சிறந்த பிரஜை என்ற வகையில் சூழலைப் பாதுகாக்க நாம் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிவகைகள் மூன்று தருக.

....

....

....

தரம் 06

பாடசாலை மட்ட மூன்றாந் தவணைப் பரீட்சை - 2023

குடியியற் கல்வி

விடைகளும் புள்ளித்திட்டமும்

Part - I

01. CWW. கன்னங்கரா
02. ஆசிரியர்
03. கிராம உத்தியோக. பிரிவு
04. தனிநபர், உலகம்
05. மகாத்மா காந்தி
06. தனித்துவம்
07. நகர பிதா
08. தண்டனைகள்
09. பல்லின
10. பயிற்சிகள்
11. பழைய மாணவர்கள்
12. கோபம்
13. தவிசாளர்
14. அநுராதபுரம்
15. வளப்பயன்பாடு
16. ×
17. ×
18. ✓
19. ×
20. ✓

(20x2=40 புள்ளிகள்)

01. i) சுயநலம், கோபப்படல், பொறுமையின்மை
    ii) சமயக்குழு, சாரணர்குழு, சுற்றாடல் குழு
    iii) பதற்றம் குறையும், நேரம் மீதமாகும், வேலைகள் இலகுவாகும்.
    iv) தினந்தோறும் பாடசாலைக்கு சமுகமளித்தல், கல்வியை விருப்புடன் கற்றல், அதிபர்,ஆசிரியர்களை மதித்தல்

02. i) மகுடவாசகம், பாடசாலைக் கொடி, பாடசாலைக்கீதம்
    ii) இலவசக் கல்வி, இலவச சீருடை, நூலக வசதிகள்
    iii) வெற்றி பெறல், மகிழ்ச்சி, நட்புறவு ஏற்படல்
    iv) நீர் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் காணப்படல், பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

03. i) யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்
    ii) வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள்
    iii) வளங்கள் வீணாவதை தடுத்தல், கனிய வளங்களை மீள் உருவாக்கல், மாற்று வளங்களைப் பயன்படுத்ல்
    iv) நியாயமாகச் செயற்படல், வினைத்திறனுடன் கடமையாற்றல், பாரபட்சமின்றி செயற்படல்.

04. i) மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை
    ii) சிரமதானம், மரணச் சடங்குகள், சமய நிகழ்வுகள்
    iii) அடக்கமாக உரையாடுவார், பிறரை கௌரவமாக மதிப்பார், சரளமாகப் பேசுவார்
    iv) மனித நேயம், கீழ்ப்படிதல், பொறுமை பேணல்

05) i) 1. நீர் 2. வளி
    ii) 1. அவுக்கண சிலை 2. அனுராதபுரத்தில்
    iii) பெருத்தமற்ற நண்பர்களின் சகவாசம், மூட நம்பிக்கையுடன் செயற்படல், வியாபார மோசடிகளில் ஈடுபடல்
    iv) சூழல் தொடர்பாக விழ்ப்பாக இருத்தல், கழிவுப் பொருட்கள் நீரில் கலத்தலை தடுத்தல், உக்கக் கூடிய கழிவுப் பொருட்களை இயற்கைப் பசளையாகப் பயன்படுத்தல்.

(5x12=60 புள்ளிகள்)